‘மகாத்மா’ சீடர்கள் அடிக்கும் இமாலயக் குட்டிக்கரணம்!

நில மன்னர்களைத் ‘தாஜா’ செய்ய ‘நித்திய தரித்திரர்’ உயிரை யெடுப்பதா?

இயலாதென்று குரு சொன்னதை இயலுமென சாதிக்கும் “ஏழைப் பங்காளர்”!

—(0)—

நாட்டுப் பொருளாதார அழிவின் மீது நச்சு நடம்புரியும் கோலாகலம்!

Phone No. 4502
விலை அணா ஒன்று
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (2—12—49) வெளியீடு (3—12—49) [இதழ் 106

காந்திக் கூற்றைக் காற்றில் விட்டு கருணை பாலிக்கிறார் ‘தேசபக்தர்கள்’!

“விவசாயிகளின் நிலை சீர்பெற உங்களது வேலைத் திட்டம் யாது?

நிலத்தை விவசாயிகளே எடுத்துக்கொள்வர். எடுத்துக்கொள்ளுங்களென்று நாங்கள் கூறவேண்டியதில்லை; அவர்களே எடுத்துக்கொள்வார்கள்.

அப்படியாயின், நிலச்சுவான்தாரர்களுக்கு நஷ்டஈடு தரப்படுமா?

தரமாட்டோம். பொதுப் பணத்தை யெடுத்து அப்படிக்கொடுத்துவிடமுடியாது. எங்கள் லட்சாதிபதி நண்பர்களிடம் இவற்றை இப்படிக் கூறுவதினின்றும் எங்களது நன்றியறிதல் தடைசெய்துவிடப் போவதில்லை.

நஷ்டஈடு தராது அவர்கள் நிலத்தை ஆக்கிரமித்துக் கைப்பற்றிக்கொள்ளப் போகிறீர்கள் போலும்!

ஆம். இந் நிலச்சுவான்தாரர்களுக்கு நஷ்டஈடு தருவதென்பது இயலாதகாரியமேயாகும்.”

மேலைநாட்டு நூலாசிரியர் லூயி பிஷருக்கும் தோழர் காந்தியாருக்கும், 1942-ல் நடந்த சொல்லாடலின் ஒரு பகுதியை மேலே தந்திருக்கிறோம். ‘காந்தியுடன் ஒரு வாரம்’ என்ற பெயரில் லூயி பிஷர் வெளியிட்டிருக்கும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட குறிப்புகளாகும் இவை. ‘மகாத்மா’ மீது பாரத்தைப் போட்டு பற்பல விஷயங்களிலும் தப்பிக்கொள்ள முயலும் தேசியத் தலைவர்களின் திருக்கண்ணோட்டத்துக்கு, இவற்றை இப்போது எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம். கண்டதற்கெல்லாம் காந்தி பெயரை ‘உச்சாடனம்’ செய்து கருத்தற்ற கணமூடிச் செயல்களிலெல்லாம் ஈடுபட்டுவரும் ‘தேசபக்த’ நண்பர்கள் காந்தியார் அன்று கூறிய, மதித்து விதித்துவந்த இக்கருத்தை இன்று காற்றில் பறக்கவிட்டு வந்ததேனோவென்று கேட்கிறோம். காந்தியைக் கர்த்தாவாக மதிக்கும் இம் ‘மக்கள் தலைவர்கள்’, அவர் கருத்துக்கு மாறுபட்டு, ஜமீன்தாரர்கட்கு நஷ்டஈடு தர துடிதுடிப்பதேன்? காலங்கடந்தால் மிகைப்படுத்துக்கொள்வர், ஒரு பகுதியையாவது உடனே கொடுக்கவேண்டுமென்று நஷ்டஈட்டுத் தொகையை ரொக்கமாகக் கொடுக்க அவசரப்படுவதேன்? பொதுமக்கள் பணத்தையெடுத்து அப்படி அனாவசியமாக நஷ்டஈட்டுத் தொகையென்று வாரி இறைத்துவிட முடியாது; அது எவ்வகையிலும் இயலாத காரியம்; இப்படி நாங்கள் செய்தால் ஜமீன்தாரர்கள் சீற்றங்கொள்ள மாட்டார்கள்” என்ற தன் மையில் அன்று காந்தியார் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கவும், தான் விழையும் ஆட்சியின் அதிகாரபூர்வமான கொள்கையாக வரையறுத்துக் கூறியிருக்கவும், காந்தி பக்த காங்கிரசார் அதனை சற்றும் மனதிற்கொள்ளாது, மக்கள் உதிரத்தை உறிஞ்சிப் பிழியும் வகையில ஜமீன்தாரர்கட்கு நஷ்டஈடு தர வரிந்துகட்டி நிற்பதின் அந்தரங்கமென்னவென்று கேட்கிறோம்.

நஷ்டஈடு கொடுத்தலொழிய, இப்பரந்த உலகில் மானத்தோடு வாழமுடியாத நிலையிலா இருக்கிறார்கள் இன்றைய ஜமீன்தார்கள்? சமஸ்தானங்கள் எந்த லட்சணத்தில் ஒழிக்கப்பட்டிருக்கின்றனவோ ஏறத்தாழ அதே லட்சணத்தில்தான் ஜமீன்தாரிகளும் ஒழிக்கப்படுவதாக நிலைகள் காணப்படுகின்றன. எல்லா வகையிலும் போதுமான வசதிகளை ஜமீன்தாரர்கட்கு நிறுத்திவைத்துவிட்டு, எஞ்சிய ஜமீன் பகுதியை மேற்கொள்வது சர்க்கார் எனப்படுவதானே ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டத்தின் உட்பொருள். இப்படிப் போதுமான வசதிகள் வழங்கிய பின்னரும் நஷ்டஈடு என்ற பெயரால் சென்னை சர்க்கார் 12 கோடி ரூபாயை— பொதுமக்கள் வரிப்பணத்தை— மீண்டும் அக்குட்டிச் சமஸ்தானாதிபதிகளிடம் கொட்டிக் குவிக்க

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

ஐ. நா.வை விட்டு தென்னாப்பிரிக்கா வெளியேறும்?

—:0:—

நிறத்திமிர் விபரீத விளைவையேற்க மறுக்கிறார் மலான்!

லண்டன், டிச. 1—

ஐ. நா. வைவிட்டு தென்னாப்பிரிக்கா வெளியேறவேண்டும் என்று பிரதமர் மலான் முடிவு செய்வார் என்று, இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இவ் விஷயமாக ‘கிளாஸ்கோ ஹெரால்டு’ பத்திரிகைஎழுதுகையில், தன் நிறத்திமிர் கொள்கையில் ஏற்பட்ட விபரீதம் என்று மலான் எண்ணாமல், இதர நாடுகள் சூழ்ச்சி செய்வதாகக் கூறுகிறார் என்றும், தன் ஊழல்களை மறைக்கவே மலான் முயல்கிறார் என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

மலானுக்குப்போயர்கள் ஜூலுக்கள் எதிர்ப்பும் அதிகரித்து வருகிறதென்றும், அவர் தன் கட்சியின் பலத்தை நிலைநிறுத்திக்கொள்ள ஏதாவது செய்தாக வேண்டும் என்றும் அப் பத்திரிகை கூறுகிறது.

—குளோப்.

நிறவெறியின் உச்சம்!

பிரிட்டோரியா, டிச 1—

ஐரோப்பியரல்லாதாரான ஆப்பிரிக்கர்கள், இந்தியர்கள் இவர்களுக்கான போக்குவரத்து விஷயங்களைப் பற்றிப்பரிசீலனைசெய்ய, தென்னாப்பிரிக்க சர்க்கார் ஒரு தனிக் கமிட்டியை நியமித்திருக்கிறது.

—ரூனோப்

கடல் அலைகளிலிருந்து மின்சாரசக்தி உற்பத்தி

கடல் அலைகள், நீரோட்டம் இவைகளிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்ய முடியும் என்பதை ஒரு ஸ்பானிஷ் என்ஜினியர் ஸீனர் ருபிரேடே என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.

இதற்கான இயந்திர சாதனங்களை அமைக்க 1,50,0000 பவுன் ஆகும் என்று தெரிகிறது இதனால் ஸ்பெயினின் நிலைமை உயர்ந்து வாழ்க்கைத் தரமும் உயரும் என்று அவர் கூறுகிறார்.

இவரை பிராங்கோவே நேரில் வரவழைத்து இவர் ஆராய்ச்சிகளைக் கேட்டு அறிந்தார்.

‘புதிய அரசியலில் ஆதித்திராவிடர் எதிர்காலம்’

நாகபுரி மாநாடு முடிவுசெய்யும்

அரசியலமைப்பு சபையைச் சேர்ந்த ஆதித்திராவிட உறுப்பினர்களும்; இன்னு தொண்டர்களும் புது டெல்லியில் நவ. 29-ந் தேதி கூடி, ஆதித்திராவிட வகுப்பைச் சேர்ந்த அரசியலமைப்பு சபை உறுப்பினர்கள், எம். எல் ஏ. க்கள் தொண்டர்கள் ஆகியோரின் மாநாடொன்றை, நாகபுரியில் பெப்ரவரி 4, 5 தேதிகளில் நடத்துவதென முடிவுசெய்தனர்.

இம் மாநாட்டுக்கு சென்னை சட்டசபைத் தலைவர் தோழர் ஜே. சிவஷண்முகம் தலைமை தாங்குவாரெனத் தெரிகிறது. ‘புதிய அரசியலில் ஆதித்திராவிடரின் எதிர்காலம்’ பற்றி, மாநாடு முடிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடரொடீஷியாவில் குடியேற்றக் கட்டுப்பாடு திட்டம்

அக்ரா, டிச. 1—

வடரொடீஷியாவில் குடியேறுவதை கட்டுப்படுத்த ஒரு மசோதா சட்டசபைக் கௌன்ஸிலில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

வடரொடீஷியா மக்களின் நலனுக்குப் பாதகமில்லாமலிருக்கவும், வடரொடீஷியாவிலேயே வசிக்க உத்தேசித்தவர்களுக்கு வசதி செய்து தரவுமே இம் மசோதாவில் வசதி செய்யப்படும்.

—குளோப்

நாகரிக வாழ்வாகுமா?

சிறந்த அரசியலை ஒரு நாடு வகுத்துக்கொண்டிருக்கிறது என்பதனால் மாத்திரம் அந்தநாட்டுக்கு கீர்த்தி வந்துவிடாது. ஆளுக்கு ஒரு பழக்கம், அதை அனுசரித்து வெவ்வேறு விதமான சிவில் சட்டம், ஜாதிக்கு ஜாதி மாகாணத்திற்கு மாகாணம் வெவ்வேறு விதமான சிவில் சட்டமிருக்கும் வரையில், அத்தகைய மக்களின் அரசியல் அமைப்பு எவ்வளவுதான் மேன்மையானதாக இருந்தாலும் அம் மக்கள் நாகரிகமாக வாழ்வதாக ஆகாது.

— தினசரி
29—11—49

‘கம்யூனிஸ்ட்களை இப்படி ஓங்கவிடலாமா?’

—;0:—

இந்தியா, இலங்கை அனைத்துக்கும் ஆபத்தன்றோ!

லண்டன், டிச. 1—

பிரிட்டிஷ் உதவியை நாடி சீன பார்லிமெண்ட் யுவான் மூலம் ஒரு கோரிக்கையை சீன தேசியவாதிகள் விடுத்திருக்கின்றனர்.

அதில் கம்யூனிஸ்டுகளை இப்படி அடக்காமல்விட்டால், அவர்கள் பலம் பெருகி ஹாங்ஹாங், மலேயா, பர்மா, இலங்கை, இந்தியா இவைகளுக்கும் ஆபத்து வந்துவிடுமே என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

—குளோப்

பெடரல் கோர்ட்டும் டெல்லியில்தான்

இந்தியாவின் பெடரல் கோர்ட்டை டெல்லியிலேயே வைத்துக் கொள்வதென்று முடிவு செய்யப்பட்டனர். இத் தகவலைத் தோழர் சத்திய நாராயண சின்ஹா சட்ட சபையில் வெளியிட்டார்.

மத்திய சர்க்கார் மீண்டும்கைவிரிக்கிறது!

சென்னை சர்க்காருக்கு ஆறு கோடி ரூபாய் கடன் தொகையளிப்பதென இந்திய சர்க்கார் 1949 50-ம் ஆண்டு பட்ஜெட்டில் அனுமதித்திருந்ததை இப்போது ரத்து செய்துவிடுவாரெனத் தெரிகிறது. இப்படிக் கொடுப்பதாக இருந்த தொகையை நிறுத்திக்கொள்ள முடிவு செய்ததற்குக் காரணம், மத்திய சர்க்காரின் நிதி நிலைமையில் இருக்கடி காணப்படுவதேயாகுமென்று டாக்டர் ஜான்மத்தாய் நவம்பர் 29-ந் தேதி யன்று டொமினியன் பார்லிமெண்டில் குறிப்பிட்டார்.

மாலை மணி

சென்னை 2—12—49 வெள்ளிக்கிழமை

கடனும்-கண்ணீரும்!

சென்னை அரசாங்கம் கேட்ட ஆறு கோடி ரூபாய்க் கடன், மத்திய அரசாங்கத்தால் மறுக்கப்பட்டுவிட்டது. கெஞ்சித்தான் கேட்டது சென்னை! என்றாலும் கொடுக்க மறுத்துவிட்டது மத்திய ஆட்சி! கொடு என்று கேட்க சென்னை ஆட்சிக்கு அதிகாரமுமில்லை; ஆற்றலுமில்லை! பணம் 'இல்லை' என்று சொல்லி கைவிரித்துக் காட்ட மத்திய ஆட்சிக்குஉரிமையுமிருக்கிறது, உறுதியுமிருக்கிறது!

கெஞ்சிக் கேட்டுக் கடன் கிடைக்கப்பெருமல் ஏமாற்றப்பட்ட சென்னை நிதி மந்திரி தோழர் பி. கோபாலர் கெஞ்சிக் கேட்டுப் பணம் பறிக்கும் வழி ஏதாவது, தம் அதிகாரத்தின் உட்பட்டுக்கிடக்கின்றதா என்று தேடிப்பார்த்து ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிருர். "ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி" என்ற பழமொழிக்கிணங்க, "வாயில்லாப் பூச்சி"களாக இந்நாட்டில் இருந்து வரும் விவசாயிகள் தலையில், கையை வைத்து, வேண்டும் பணத்தைப் பெற்றுக்கொள்வதே சாலச் சிறந்த வழி என்று கண்டுபிடித்துள்ளார்,

விவசாயிகள், ஆண்டுதோறும் அரசாங்கத்துக்குச் செலுத்தும் நிலவரியைப் போன்ற சம அளவு தொகையைக் கட்டாயக் கடனாக, அரசாங்கத்திற்கு நிலவரியோடு சேர்த்துக் கொடுத்து விட வேண்டுமாம். அது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, வட்டியோடு சேர்த்துத் திருப்பித் தரப்படுமாம். பெற்றுக்கொண்ட தொகைக்கு அரசாங்க "பாண்டு"கள் வழங்கப்படுமாம். அவற்றை அந்த ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகப் பணமாக மாற்றிக்கொள்ள முடியாதாம்!

இதுதான் பணம்பெற, நிதி மந்திரியார் கடைப்பிடிக்கப் போகும்வழி. இந்த முறையின் மூலம் ரூபாய் ஆறு கோடி எதிர்பார்க்கலாம், என்று கூறுகிருர் மந்திரியார். இவ்வகையில் சென்னை அரசாங்கம் பணம் திரட்டுவதற்கு, மத்திய அரசாங்கம் ஆதரவு தந்து விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

விளைவு பெருகவில்லை—விளைவைப் பெருக்க விவசாயிகளுக்கு ஏற்ற வசதிகள் இல்லை-அவர்களுக்கு அளிக்கப்படக்கூடிய வசதிகளும் அளிக்கப்படவில்லை-விளைச்சலும் எண்ணியபடி பலன் தருவதில்லை-என்ற இப்படிப்பட்ட நெருக்கடிச் சூழ்நிலையில் கிடந்து உழலும் உழவர் மக்களது தலையைத் தடவ, அரசாங்கம் முற்பட்டிருக்கிறது என்றால், சென்னை அரசாங்கத்துக்கு எத்துணை அளவு நெஞ்சழுத்தமும்- இரக்க மற்ற தன்மையும் இருக்கவேண்டும் என்பதை எளிதில் ஊகித்தறிந்து கொள்ளலாம்.

விவசாயிகள் என்ன அப்படி மிதமிஞ்சிய சுகத்திலே மிதக்கிருர்கள். அவர்களிடத்திலிருந்து கடன்கேட்க முனைந்து விட்டார் நிதி அமைச்சர்! விவசாயத்தில் இந்நாட்டில்ஈடுபட்டிருக்கும் பெரும்பாலோர் ஏழைகளாகத்தான் இருக்கிருர்கள்; மிகமிகக் குறைந்தவர்கள்தான் பண்ணை அரசு நடத்துவோராக இருந்து வருகிருர்கள். இந்த நிலைமையைக் காங்கிரஸ்காரர்களே அடிக்கடித் தெரிவித்து வந்திருக்கிருர்கள். விவசாயத் தொழிலால் நல்ல வருமானம் இந்நாட்டில் கிடைப்பதில்லை, என்பதைக் காங்கிரஸ் மந்திரிமார்கள் இயந்திரத் தொழில் வளர்ச்சியின் அவசியம்பற்றி பேசவரும் போதெல்லாம், குறிப்பிட்டே வந்திருக்கின்றனர். விளைச்சலைப்பெருக்குவதற்கு இன்றியமையாதனவாகத் தேவைப்படும் உரம்-தழை, எரு முதலியவற்றையே வாங்கமுடியாத நிலையில், பெரும்பாலான விவசாயிகள், பொருளாதார நெருக்கடியால் தாக்குண்டு கிடக்கிருர்கள் என்பதை நாட்டினர் நன்கு அறிவர். பெரும் பகுதி உழவுகள், நீர்ப்பாசனத்திற்கு ஏற்ற கிணறுகளை வெட்டிக் கொள்வதற்கே வகையற்றுக் கிடக்கிருர்கள் என்பதை உணர்ந்து, அவர்களுக்குக் கிணறுவெட்ட வேண்டியஉதவி நிதியை இதே அரசாங்கம் அளித்து வருகிறதுஎன்பதையும்உணராமலும் இப்படிப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருக்கும் விவசாயிகளின்குரல்வளையில் கையைப் போட்டு, கடனாகப் பணத்தைப் பறிக்க சென்னை அரசாங்கம் எண்ணுகிறது என்ருல், எத்தகைய கொடுமையை ஏழையர்க்குச் செய்ய அது துணிந்துவிட்டது என்பதை, எளிதில் அறியலாம்! இதுதான் ஏழை எளியவர்க்கு மக்களாட்சி 'காட்டும்' பரிவா? பத்து ரூபாய்க்குக் குறைவாக நிலவரி செலுத்துவோர், இந்தக் கட்டாயக் கடனைக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற விவசாயிகள் அனைவரும் கடன் கொடுக்க, ஏற்ற வசதியில் இருப்பதாக இந்த அரசாங்கத்தின எண்ணம் போலும்! என்ன 'தெளிவான' எண்ணம்! ஆகா!

சென்னை மாகாண நிதியின் நிலைமை மோசமாக இல்லை, திருப்திபளிக்கக்கூடிய வகையிலேயே தான் இருக்கின்றது", என்று, அண்மையிலே வீராப்பு மொழி பேசிய நிதி அமைச்சர் கோபாலர், இப்பொழுது கட்டாயக் கடன் ஆறு கோடி கேட்கிருரே-அதுவும் விவசாயிகளிடத்தில் கேட்கிருரே. முன்--பின் செய்கைகள் பொருந்துகின்றனவா! இல்லையே!

விவசாயத் தொழிலில் மேம்பட்டிருக்கும், பண்ணை வைத்து நடத்தும் ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலானேர் கடன் கொடுத்து உதவும் மிதமிஞ்சிய வருவாயுள்ள நிலையிலா இன்று இருக்கிருர்கள்? இல்லையே! விவசாயிகளின் வாழ்வு அதனை எடுத்துக் காட்டுமே!

விவசாயிகளுக்குக் 'கிட்டிகட்டி' பணம் பறித்துக்கொள்ளும் நிலையில், உணவு உற்பத்திப் பெருக்கக் கவனிக்க வசதிதான் ஏற்படுமா? வழிதான் பிறக்குமா? தொழில் நடத்த முடியாமல் கவலை மேலிட்டு, இருக்கும் கழனியையும் தரிசு போடத்தானே அவன் மனம் விரும்பும்!

இப்பொழுதே செலுத்த வேண்டியிருக்கும் வரியை, உரியகாலத்தில் செலுத்த முடியாமல் கிடந்து உழலும் உழவர்கள் எண்ணற்றவர்களாக இருக்கிருர்களே! வழக்குகள் தொடுக்கப்பட்டு நில வரி செலுத்த முடியாமல், சிறை வாழ்வை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மனமுடைந்து கிடக்கின்றனரே மக்கள்.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு ஆண்டு வரித்தொகையைக் கடனைக் கொடுக்கும்படி கேட்டால்,எப்படி அவர்களால் கொடுக்கமுடியும்? அவர்கள் அன்ருட வாழ்வு என்னாகும்? பெரும் பண்ணைகளிடத்து அரசாங்கம் கடன் வாங்குவதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை! அவர்களாலாவது ஓரளவுக்குக் கடன் தந்துதவ முடியலாம்! அப்படிக் கடன் கொடுப்பதாலும்வாழ்வுநசித்துவிடாது! ஆனல் ஏழை விவசாயிகள் எப்படிக் கொடுக்க இயலும்! விவசாயிகளின் எண்ணத்தையாவது, இது குறித்து முன் கூட்டியே அறிந்து கொள்ள அரசாங்கம் முற்பட்டதா? இல்லையே! கட்டாயக் கடன் என்றல்லவா குறிக்கப்படுகிறது! என்ன பொருள்? கடன் கொடுக்க விவசாயிகளுக்கு மனம் இருக்காது; எனவே 'கிட்டிகட்டி' அவர்களிடம் உள்ளதைப் பிடுங்க வேண்டும் என்பதுதானே!

ஆலை அரசர்கள்-வியாபாரக் கோமான்கள்-பண்ணை அரசுகள்-வட்டிக்குக் கடன் கொடுக்கும் வல்லூறுகள்-வளமுள்ள பாங்கிகள்-முதலைப் போட்டுப் புரட்டி, பெரும் பொருள் ஈட்டும் புரட்டர்கள்-பணம் படைத்த ஆண்டவர்கள்-கோயிற் பெருச்சாளிகள்ஆகிய இன்ன பிறர் பணம் படைத்தோராக விளங்கும்போது, அவர்களிடத்திலெல்லாம் செல்லாமல், ஏழை விவசாயிகளிடத்தில் கூர் அம்பு நீட்டுவானேன்; பணம் படைத்தோரிடத்தில்! கொஞ்சு மொழிபேசி தஞ்சமடைகின்றனர்! ஏழை உழவர் மக்களிடத்தில், மிஞ்சு மொழி பேசி இரத்தத்தை உறிஞ்சுகின்றனர்! இதுதான் அகிம்சை ஆட்சியின் அடையாளமா?

பண வருவாய்மிக்க மற்ற தொழில்களை விட்டு விட்டு, குறைந்த - நிலையில்லாத - வருவாய்தரும் விவசாயத் தொழிலுக்கு ஒரேயடியாக இக்கொடுமை இழைக்கப்படுகிறது என்ருல், ஏழை விவசாயிகள் உலகம் எந்த நிலையில் சென்று நிற்கும் என்பதை அரசாங்கம் சற்று உணர்ந்து பார்க்கவேண்டும்.

கதருக்கு ஒரு கோடி ரூபாயும், 442 மதுவிலக்குப்பிரசாரகர்களுக்குப் பல இலட்ச ரூபாயும், பயன்தரா குடிசைத் தொழிலுக்குப் பல கோடி ரூபாயும் வேறு பல உருப்படாத் திட்டங்களுக்கு எண்ணற்ற கோடி ரூபாயும் செலவழிக்கத் துணிந்திருக்கும் சென்னை அரசாங்கம் பணத்தை அப்படிப்பட்ட வழி செல்லவிடாமல் தடுத்து நிறுத்த முற்படுமாயின், எத்தனையோ கோடிகள் அதன் மூலம் மிஞ்சும்; பிறகு ஆறுகோடி ரூபாய் கடன் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

குறிப்பிட்ட பெரும் வருவாய் உடையவர்கள்- அவர்கள் எந்தத் துறையில் ஈடுபட்டிருந்தாலும், அவர்களிடத்திருந்து கடனைப் பெற ஒருக்கால் வழி அமைத்துக் கொண்டாலும், அதைப்பற்றி நாம் அதிகமாகக் கவலைப்பட்டிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அந்த வழியைக்கூட விட்டு, ஏழை விவசாயிகள்மீது பலவந்தமாகப் பெருஞ்சுமையை ஏற்ற முற்படும் கொடுஞ்செயல் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும்.

வறுமையில் வாடும் விவசாயிகள் கடன் கொடுக்க மறுப்பார்களேயானல், அரசாங்கம் அவர்கள்மீது எவ்வித நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்? நீதி மன்றம் ஏற்றுதல்-கை விலங்கிடுதல்-சிறையில் தள்ளுதல் ஆகிய ஒத்த கைய செயல்கள் கையாளப்படுமா? கையாளப்பட்டால் விளைவு என்ன ஆகும்? விவசாயிகள் கூட்டம் பட்டினிப் பட்டாளமாக மாறத்தானே செய்யும்! பட்டினிப் பட்டாளம் வெங்கொடுமை புரியும் கொடும்பட்டாளமாக மாறி நிற்கத்தானே செய்யும்!

வாடும் விவசாயிகளிடத்துக் கட்டாயக் கடன் கேட்கும் அரசாங்கத்தின் செயல் கண்டு விவசாயிகள் பணத்தையா வீசுவர்? கண்ணீரைத்தானே சொரிவர்! **'ஆற்ருமல் அழுத கண்ணீர் அரசினைத் தேய்க்கும் படை'** என்ற நிலைதானே ஏற்படும்! அதை இன்றைய ஆளவந்தார்கள் உணர்கிருர்களா? உணர்ந்தால் ஏற்றது செய்யட்டும்! இல்லையாயின் இன்னலை ஏற்கட்டும்! அது தானே உலக வரலாறு கற்பித்து வரும் பாடம்!

நிலமற்ற உழவர்கள் மீது போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம்

வட இத்தாலிக்கும் கிளர்ச்சி பரவிற்று

மிலான், டிச. — ஸிஸிலியிலும் தென் இதாலியிலும் ஏற்பட்ட விவசாயிகள் கிளர்ச்சி, இப்பொழுது வட இதாலிக்கும் பரவிவிட்டது.பாரி என்ற இடத்தில்நிலமற்ற விவசாயிகள் மீது போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததின்காரணமாக மூன்று பேர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் இதைக்கண்டித்து நாடெங்கும் ஸ்டிரைக் பரவும் நிலை ஏற்பட்டிருக்கிறது

சில இடங்களில் நிலங்களை ஆக்ரமித்துக்கொண்ட விவசாயிகள் போலீசாரால் விரட்டப்பட்டிருக்கின்றனர்,

இந்திய ரயில்வே வருமானம்

இந்திய ரயில்வேக்கள் 1949 அக்டோபரோடு பத்துமாதங்களில் பிரயாணி வண்டிகள் மூலம் ரூ. 70,64,46,489-ம் குட்ஸ்வண்டிகள்மூலம் ரூ. 1,03 50,96 830-ம் சம்பாதித்திருப்பதாகக் கணக்கிடப்படுகிறது.1948-ல் இதேகால அளவுக்கு பிரயாணிவண்டிகள் மூலம் ரூ. 68 53,82,639-ம் குட்ஸ்வண்டிகள்மூலம் ரூ. 76,54 99,360-ம் வருமானம் கிடைத்தது.

தானிய இன்ஷூரன்ஸ் திட்டம்

சென்னை சர்க்கார் பொருளாதார ஆய்வாளர் டாக்டர் பி. நடராஜன்.சிலமாசங்களுக்குமுன்பு வெளியிட்ட தானிய இன்ஷூரன்ஸ் திட்டத்தை இப்போது மீண்டும் பரிசிலனை செய்துவருகிருரெனத் தெரிகிறது. அவர் அண்மையில் ஐரோப்பா சென்று திரும்பியிருப்பதால், மேற்கத்திய நாடுகளின் பொருளாதார வல்லுநர்கள், விவசாய ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரோடு தான் கலந்து பேசிக் கண்டறிந்தவற்றைக்கொண்டு, இப்போது மீண்டும் தனது பழைய திட்டத்தைப் பரிசிலனை செய்ய முனைந்துள்ளாரெனக் கூறப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிப்பதாகும். பருவகாலம் பொய்த்துவிடும்பட்சத்தில், வேதனைக்குள்ளாகும் விவசாயிக்குப் பேருதவியாயிருக்கக்கூடியதாகும் இத்திட்டம்.

கிராம சுகாதாரத் தேவைகள்

ஐயாயிரம் மக்களுக்கொரு மருத்துவப் பெண்டு (மிட்வொய்வ்) பத்தாயிரம் பேருக்கு ஒரு பொது சுகாதார நர்ஸ் - இரண்டொரு மருத்துவப் பெண்டிர்-ஒரு சானிட்டரி இன்ஸ்பெக்டர்—ஒரு சமுதாயத் தொண்டர் அடங்கிய சுகாதார நிலையம், இதுபோன்று பல சுகாதார நிலையங்களடங்கிய ஒரு சுகாதார யூனிட்', முப்பது யிரம் மக்களுக்கு ஒரு டிஸ்பென்சரி (டாக்டரோடு) -சரியான சுகாதார சர்விஸிற்கு தேவைபடுபவைஇவையே என்று 'சுகாதாரமும் வாழ்க்கையும்' பற்றி ஐக்கிய நாடுகள் பொருளாதார சமூகசலாச்சார ஸ்தாபனத்திற்கு அறிக்கை சமர்ப்பித்துள்ள நிபுணர்குழு குறிப்பிட்டுள்ளது.

சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம்

4—12—49 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு 2/45, கழகக் கட்டிடத்தில், சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தேர்தலும், மாகாணக் கழகத்திற்கு சென்னையின் சார்பாக பிரதிநிதிகள் தேர்தலும் நடைபெறும்.

சென்னையிலுள்ள தி.மு.க. கிளைக் கழகத்தினர் மாவட்டக் கழகத்திற்கென, தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டுபேர் வீதம் உள்ள உறுப்பினர்களை, அவசியம் அனுப்பிவைக்கக் கோருவதோடு, மாவட்டக் கழகத்திற்கென இரண்டு உறுப்பினர்களை இன்னும் தேர்ந்தெடுக்காத கழகத்தினர் உடனே ஆவன செய்து, தங்கள் உறுப்பினர்களையும் டை கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

கே. கோவிந்தசாமி,
அமைப்புக் குழு உறுப்பினர்.
சென்னை மாவட்டம்.

ஊழல் பேர்வழிகளின் ஆட்சியினல் உருப்படுமா இந்த நாடு?

நாணயத்தை வரவேற்போம்; நையாண்டியை நசுக்குவோம்

அக்ரமத்திலிருந்து விடுபட தனியரசே தக்க மருந்து!

———: (0) :———

சோழவந்தானில் தோழர்கள் சிவசாமி - சம்பத் - தங்கபழம்

27-11-49 ஞாயிறன்று தி. மு. கழக துவக்க விழாப் பொதுக்கூட்டம், ஆற்று மைதானத்தில் ஆரம்பமாயிற்று. தூத்துக்குடி தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் தலைமை தாங்கினர்கள் தோழர் சிவம் நாடடுப்பண் பாடினர். தலைவர் முகவுரைக்குப்பின் மழையின் காரணமாக முக்துவிலாஸ் சினிமா கொட்டகையில் கூட்டம் தொடர்ந்து நடந்தது. திராவிட மாணவர் கழகங்கள் சோழவந்தானைச் சுற்றிய சுமார் 6 கிராம கழகங்களின் சார்பாக தோழர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. தலைமையுரையாக தோழர் எம். எஸ். சிவசாமி பேசியதன் சுருக்கம்:—

நாதியற்றுக் கிடக்கும் மக்களுக்கு நல்ல வழி காட்ட இந்த நாட்டில் எங்கள் கட்சியைத் தவிர வேறு கட்சி கிடையாது. அரசியல், பொருளாதார, சமுதாய துறைகளில் நம்மை நிரந்தர ஆமையர்களாய், ஊமையர்களாய் வைத்திருக்க காங்கிரஸ் கட்சி பயன்பட்டுவருகிறது. பொங்கி எழும் பொது மக்களின் எழுச்சியைத்தடுத்து நிறுத்த, எல்லாவித அடக்கு முறைகளையும் அவிழ்த்து விடுகிறார்கள் ஆளவந்தார்கள். ஏற்கனவே 340 கோடி டாலர்களுக்கு இந்தியாவை அடகு வைத்திருக்கும் நேரு சர்க்கார் மீண்டும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கொஞ்சி குலவி இந்தியாவை ஏலங் கூறுகிறது. இதற்கிடையில் நம்மை, உறிஞ்சி வரும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கொடுமை வேறு. இந்த அக்ரமங்களிலிருந்து நாம் அகலுவதற்கு ''தனி அரசு'' தவிர வேறு வழி கிடையாது.

நம்முடைய நேர்மையான கொள்கைகளைப் பற்றி எதுவும் பேச வக்கற்ற காங்கிரஸ்காரர்கள், பார்ப்பன துவேஷிகள், தேசத் துரோகிகள் என்று குறை கூறுகின்றனர்.

அவைகளை நீங்கள் நல்ல முறையில் தெரிந்து, தெளிவடைந்து எங்களுக்கு ஆதரவு தாருங்கள் என்று பேசி முடித்தார்.

ஈ. வெ. கி. சம்பத்

56 லட்சம் ரூபாயுடனும் 12 அவுன்ஸ் அரிசியுடனும் நம்மைவிட்டு அகன்றது அவைசர் ஆட்சி. இந்தக் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி பீடத்தில் ஏறி, 56 லட்சத்தையும் தீரத்துக்கட்டியதுமல்லாமல், அரிசியையும் 6 அவுன்சாக ஆக்கிவிட்டார்கள். சகுனம் பார்த்து ஜாதகம் பார்த்து இரவு 12 மணிக்கு ஆட்சிபீடம் ஏறினர்கள் காங்கிரஸ்காரர்கள். இவர்களுக்கு வேறு நேரம் கிடைக்கவில்லை போலும். கொள்ளைக்காரர்களும் திருடர்களும் வெளிக் கிளம்பும் நேரத்தில் பார்த்து, இவர்கள் அரசுபுரிய வந்ததன் விளைவுதான், அவர்களே பொதுமக்களை கொள்ளையடிக்க நேர்ந்து விட்டது போலும். இவர்கள் போடாதவரி கிடையாது. எல்லா வரிகளுக்கும் மதுவிலக்கை காரணம் காட்டுவதன் மூலம் மக்களை மரக்கட்டைகளாக எண்ணுகிறது காங்கிரஸ் சர்க்கார். பாலம் போடுங்கள் என்று பக்தவத்சலனரைக் கேட்டால் பணமில்லை, காரணம் — மதுவிலக்கு என்கிறார். பள்ளிக்கூடம் கட்டுங்கள் என்று மக்கள் மாதவமேனனைக் கேட்டால் பணமில்லை, காரணம்— மதுவிலக்கு என்கிறார் இப்படி எதற்கெடுத்தாலும், மதுவிலக்கு, மதுவிலக்கு என்று கூறுகிறார்கள். ஆனால் இவர்களுடைய மதுவிலக்கின் யோக்கியதையை நினைத்தால் பொதுமக்கள் கைகொட்டிசிரிக்கிறார்கள். சங்கங்களுடைய தேர்தல் பிரச்சாரத்துக்குச் சாதகமாக மக்கள் வரிபணத்திலிருந்து, 400 மதுவிலக்குப் பிரச்சாரகர்களை நியமிக்கப் போகிறார்களாம்.

இந்த மதுவிலக்குப் பிரச்சாரம் எப்படி இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? ஒரு கூட்டத்தில் ஒரு மதுவிலக்குப் பிரச்சாரர் கூறுவர், தோழர்களே கள் குடியாதீர்கள் என்று. அப்பொழுது பொது மக்கள்கேட்பார்கள், கள்ளுக் கடைகளை மூடிவிட்டு, கள் குடியாதே என்று கூறுகிறீரே, இதன் அர்த்தம் என்ன என்று. அப்பொழுது அவர், வேறு பல முறைகளிலும் கள் இறக்கலாம் சாராயம் காய்ச்சலாம். இரண்டும் முடியாவிட்டால் 'ஜிஞ்சர்பெரி' யாவது வாங்கி குடிக்கலாம், என்று, மறந்திருந்த மக்களுக்கும் மதுவை ஞாபகப் படுத்துவார். இப்படித்தானே இருக்கும் அவர்கள் மதுவிலக்குப் பிரச்சாரம் திருடர்களை, கொலைகாரர்களை தேடுவதற்குத்தான் போலீஸ்காரர்களைப் பயன்படுத்துவது வழக்கம் ஆனால் காங்கிரஸ்காரர்கள் ஆட்சியில், அரசியல் தலைவர்கள் பொதுஜன ஊழியர்களை தேடுவதற்கும் பிடிப்பதற்கும்தான் போலீஸ் இலாகா பயன்பட்டுவருகிறது. இந்த ஊழல் பேர்வழிகளின் ஆட்சியால் இனிநாடு உருப்படுமா? ஆகவே, நம்முடைய நாட்டு நன்மையைக் கருதி நீங்கள் நல்லதொரு முடிவுக்கு வாருங்கள் என்று பேசி முடித்தார்.

இரா. சு. தங்கப்பழம்

நம் இடத்தில் ஏதோ பிளவு ஏற்பட்டுவிட்டது இனி நாமும், நமது கொள்கையும் அழிந்து விடுவோம் என்று மாற்றுக் கட்சிக்காரர்கள் எண்ணினால் அது பலனளிக்காது. நாங்கள் கொள்கை ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு, பெருந்தன்மையோடு பிரிந்துகொண்டவர்கள். காமராஜ்— ஆச்சாரி கோஷ்டிப் பூசல், திருப்பரங்குன்ற கைகலப்பாக முடிந்தது போலவோ, பஞ்சாப்மாகாண சட்டசபை முன்பு ''பெர்மிட்'' டுக்காக இரண்டு எம் எல் ஏ.க்கள்சண்டைபோட்டுக்கொண்டதுபோலவோ, அல்லது சுதர்ச்சட்டை கவுன்சிலர்களுக்குள்ளேயே பொள்ளாச்சியில் கைகலப்பு நேர்ந்தது போலவோ எங்களிடத்தில் எதுவும் நடக்கவில்லை எனவே எதிரிகள் ஏமாந்து போவது நிச்சயம்.

மூன்றே நிமிஷம் போதும்!

சரிந்துவரும் காங்கிரசுக்கு சட்டைக்கட்டுகள் நடத்த காமராஜர்கள் சூறவளி வேகத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். நாணயமாக, நேர்மையாக காமராஜர் நம்முடைய கருத்துக்களுக்கு மறுப்பு கூறினல் நாம் அதை வரவேற்கிறோம் ஆனால் கீழ்த்தரமான முறையில், கேலி, கிண்டலாகபேசி, காங்கிரசைப் பாதுகாக்க நினைக்கிறார் காமராஜர் காங்கிரஸ்காரர்களைத் தவிர வேறு எவரும் அரசாங்கத்தை ஏற்றால் 3 நாட்கள் கூட நிலைக்கமாட்டார்கள் என்று காமராஜர் பீதிதகிக்கொள்ளுகிறார் 3 நாட்கள் என்ன 3 நிமிட நேரங்கள் நமக்குப் போதுமானது. ''ஆனந்தவிகடன்'' மூலமாகத்தான் கம்பராமாயணத்தை அறிந்துகொண்டேன் என்று கூறுவதன்மூலம் தன்னுடைய ''மடமை'' யைத் திறந்து காட்ட நாம் என்ன 'மாதவ மேனன்'களா? அல்லதுயாகம் வளர்த்து மழையை எதிர்பார்க்கும் தேரளுந்தூர் திருவாளர்களா? அல்லது ஓமகுண்டலம் நடத்தி பட்டேலுக்கு உயிரை நீடிக்கச் செய்யப்போகும் மந்தமதியினரா? ''சக்திக்கேற்ற உழைப்பு உழைப்புக்கேற்ற தேவை'' என்ற ஒரே வரியின் மூலம், மூன்றே நிமிடத்தில் நாம் நாட்டை செம்மைபடுத்த முடியுமே.

எங்களை அசைக்க முடியாது!

நாம் ''பார்ப்பனத் துவேஷிகள்'' என்று கூறி, நம் மீது பழி சுமத்துகிறார்கள் காங்கிரஸ்காரர்கள் தனிப்பட்ட பார்ப்பனர்களை வெறுக்க நாங்கள் என்ன மனிதப் பண்பு அற்ற மிருகங்களா? அல்லது, ஆப்பிரிக்கா நாட்டு காப்பிரிய ஜாதியினரா? பார்ப்பனியத்தைத்தான் வெறுக்கிறோம் அது, பார்ப்பனர்களை மட்டும் அல்ல, எந்தச் சாதி, மத, சமூகத்தாரிடமும், எந்த உருவத்தில் 'பார்ப்பனீயம்' குடி புகுந்தாலும் நாங்கள் அதை கண்டிக்கிறோம்.

காமராஜர்களின் தூற்றல் பாணங்கள், நிரந்தர வலிவுள்ள எங்களுடைய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எதுவும் செய்துவிட முடியாது என்று பேசி முடித்தார்

இடையிடையே, கேள்விகளுக்கு பதில் கூறிவிட்டு, தன்னுடைய 'முடிவுரை' சொற்பொழிவை நிகழ்த்தி கூட்டத்தை முடித்தார். தலைவர் தோழர் டி. ஆவுடையப்பனின் வந்தனே சாரத்துடன் இரவு 11 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. (வி-...

வெளிவருகிறது!

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: C. N. அண்ணத்துரை

தனிப் பிரதி அணு 1. — வருடசந்தா ரூ...

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்ட்டுகள் தேவை

விவரங்கட்கு:—

''மாலை மணி'' பதிப்பகம்,

சென்னை—1.

செய்திகளைத் தணிக்கைசெய்ய மலான் சர்க்கார் முஸ்தீபு!

நிறவெறிக்கொள்கை அம்பலமாவதை தடுத்து நிறுத்த ஏற்பாடு

பிரிடோரியா, நவ. 30—

தென்னப்பிரிக்காவைப் பற்றி செய்திகள் கண்டபடி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன வென்றும், இதனால் தென்னப்பிரிக்காவின் மதிப்பே குறைந்து விடுகிறதென்றும் ஆகவே, வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் எல்லாச் செய்திகளையும் தணிக்கைச் செய்வதென்று மலான் சர்க்கார் நிர்மாணித்திருக்கும் என்பது தென்னப்பிரிக்கா தந்தி தபால் இலாகா மந்திரி எராஸ்மஸ் செய்த சொற்பொழிவிலிருந்து தெரியவருகிறது.

தென்னப்பிரிக்காவைப் பற்றி இவ்வளவு மோசமான பிரசாரம் அதன் சரித்திரத்திலேயே இதுவரை நடந்ததில்லை என்றும், ஆகவே, செய்திகளை அனுப்பும் நிருபர்கள் அனுப்பும் எல்லா செய்திகளுமே குறித்த இடத்திற்குப் போய்ச்சேரும் என்று எதிர்பார்க்க வேண்டாம் என்பதை அவர் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிறார்.

இப்பொழுது சட்டபூர்வமாக இந்தத்தணிக்கைமுறையைப் பயன்படுத்த அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை. ஆகவே இதற்காக ஒரு மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக்கவும் மலான் சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

தென்னப்பிரிக்காவிலிருந்து அனுப்பப்பட்ட சில தந்திகள் ஏற்கனவே தணிக்கை செய்யப்பட்டு, தடுக்கப்பட்டுவிட்டதென்று 'டெய்லி மிரர்' செய்தி ஒன்று கூறுகிறது. மலான் சர்க்காரைப் பற்றி குறை கூறி ஏதாவது தந்தி அனுப்பவேண்டியிருந்தால், நிருபர்கள் ரொடீஷியாவுக்கோ, அல்லது போர்த்துகீஸிய கிழக்கு ஆப்பிரிக்காவுக்கோசென்று அங்கிருந்து செய்திகளை அனுப்பியாகவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும் அப் பத்திரிகை கூறுகிறது

காஷ்மீர் தகரா... யு. எஸ். முதலீ...

சமரசத்துக்குப் பின்... மூலதனம்!

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே செய்து கொள்ளப்படப்போவதாய்க் கருதப்படும் மேம்கேசம்ஸ் த்தகஜ்பந்தக்கு விவரங்களைத் தயாரிப்பதில், ...யாவிலுள்ள அமெரிக்க அரசு பிரதிநிதி காரியாலயத்தினருக்கு உதவி செய்யவந்திருக்கும் ... எஸ். செனட்டர்களும், ...ளிகளும் தங்கள்சர்க்காருக்கு ...சப்ருக்கும் ...சுகள் ... இந்தியாவில் ஏற்றுக்கொள்... ...தகவாக இருப்பதாக ...ருதப்படுகிறது. இந்திய ...அமெரிக்க ...வேண்டுமானல் இன்னின்ன ...பர்களுக்கு இந்திய கட்டுப்பாடுகள் ...க வேண்டுமென்று அவர்கள் வரையறுத்து சிபார்சு செய்... ...தை, இந்திய யூனியன் ஏற்றுக்கொள்ளுமோ வென்பது சந்தேகமே!

மக்களின் ஆதிபத்திய உரிமையிலும் கைவைக்கக்கூடியனவாக இருக்கும் அந்நிபந்தனைகள் என்று கூறப்படுகிறது. காஷ்மீர் தகராறு தீர்க்கும்வரை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே போர் மூளலாமென்பதற்குச் சிறிதளவு அறிகுறிகள் கூட நீக்கும்வரையில் யு. எஸ். முதலாளிகள் இந்த முதலீடு செய்ய முன்வரமாட்டார்களென்று தெரிகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் சமாதான ஒப்பந்தமேதாவது ஏற்பட்டால்தான் அமெரிக்க மூலதனத்தை இங்கு எதிர்பார்க்கலாம்.

ஆங்கிலோ- அமெரிக்க தரப்பார் இது காரணத்தினாலேயே, காஷ்மீர் தகராறைத் தீர்க்க மீண்டும் முயற்சியெடுப்பரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

— 'பினி...

அழிவுப் பாதையில் முன்னேறுகிறது ஐ. நா. சபை

சர்வதேச சங்கம் அடைந்த கதிதான ஐ. நா. வுக்கும் ?

அமைதியைக் கெடுப்பது யார் ? அமெரிக்காவா, ரஷியாவா ?

ஐ. நா. சபைக்கு தோழர் விஷன்ஸ்கியின் எச்சரிக்கை!

பழைய சர்வதேச சங்கத்துக்கு என்ன கதி ஏற்பட்டதோ, அதே கதிதான் இந்தஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கும் ஏற்படப் போகிறது. மீண்டும் யுத்தத்தை மூட்டிவிட முனைந்து நிற்கும்நாடுகளைக் கட்டுப் படுத்தும் சக்தி இந்த ஸ்தாபனத்துக்கில்லை

உலக கம்யூனிஸ்டுப்புரட்சியை சோவியத் யூனியன் ஆதரிக்கிறது என்றும், கம்யூனிஸ்டு நாடுகளும் முதலாளித்வ நாடுகளும் சமாதானமாக வாழ்வதைஏற்றுக்கொள்ள ரஷியா மறுக்கிறது என்றும், புதியதோர் யுத்தத்துக்கு ரஷியா முஸ்தீபு செய்கிறது என்றும் குற்றச்சாட்டப்படுவது ரஷியாமீதுவீண்பழிசுமத்துவதற்காக நடக்கும் வேலை”

என்று அண்மையில் ஐ. நா பொதுச் சபையில், தோழர் விஷன்ஸ்கி பேசியிருக்கிறார்.

இரண்டாவது உலகப்போருக்குப்பின், ஐ. நா. சபையின் போக்கைக் கூர்ந்து கவனித்து வருபவர்களுக்கு, தோழர் விஷன்ஸ்கியின் குற்றச் சாட்டுகள் அத்தனையும் உண்மை என்பது தெள்ளிதிற் புலப்படும்.

கடந்த போரின்போது ரஷியாவின் உதவியைநாடி, அமெரிக்காவும் பிரிட்டனும் போர் முடிந்த பின்னர் ரஷியாவை எங்ஙனம் மட்டந்தட்டுவது என்ற நோக்கத்துடனேயே வேலை செய்து வருகின்றன. ரஷியாவின் பலம் அதிகரித்திருப்பதை உணர்ந்து, நேரிடையாக அதனைத் தாக்க பயந்து, அதற்கு எதிராகஐரோப்பிய நாடுகளைச் சேர்த்தும், ஆங்காங்கே கம்யூனிச எதிர்ப்புப் பிரசாரம் செய்தும் வருகின்றன. இதற்கு 40 கோடி டாலர் கொடுத்து உதவ அமெரிக்கத் தலைவர் தோழர் ட்ருமன் முதன் முதலில் முன்வந்ததே ரஷியாவை ரஷிய செல்வாக்கைக் குறைக்கவேயாகும். இதனைத் தொடர்ந்து வேறு பல ஐரோப்பிய நாடுகளுக்கும் உதவி புரிய முன்வந்தார் தலைவர் ட்ருமன். அமெரிக்காவின் இத்தகைய முயற்சிதான் பின்னர் மார்ஷல் திட்டமாக வெளிப்பட்டது. சுருக்கச்சொல்லவேண்டுமானால், மார்ஷல் திட்டம் என்பது ரஷியாவுக்கு எதிராகச்செய்யப்பட்ட ஒரு போர் முஸ்தீபேயாகும்.

இவ்வளவும் செய்து வந்த அமெரிக்காவுக்குத்தான், ஐ. நா. சங்கத்தில் அளவற்ற செல்வாக்கு. அமெரிக்காவும், அதன் அடிவருடிகளும் கூடி, இட்டதுதான் சட்டம் என்ற நிலையிலே இருந்து வருகிறது. ஐ. நா. சங்கம் என்றால், அச்சங்கம் எப்படி உலக அமைதியை நிலைநாட்ட இயலும்.

அணுக்குண்டு தன்னிடம் இருக்கிறது என்ற காரணத்தால், சமாதான முயற்சிகள் பலவற்றை, அமெரிக்கா பல தடவை தடுத்து வந்திருக்கிறது பாரீசிலும், நியூயார்க்கிலும் கூடிய சமாதான மாநாடுகள், எந்த நோக்கத்தோடு கூடினவோ, அந்த நோக்கத்தில் வெற்றி காணாமல், சமாதான மாநாடுகள் சச்சரவு மாநாடுகளாக முடிந்தமைக்கு, இந்த முதலாளித்துவ நாடுகளே காரணகர்த்தாக்களாகும். இதை யும் தோழர் விஷன்ஸ்கி தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதாவது, “உலக சமாதானத்தை நிலைநாட்ட ரஷியா நான்கு தடவை முயன்றது இந்த முயற்சியை ஆங்கிலோ-அமெரிக்க நாடுகள் நிராகரித்துவிட்டன” என்று கூறியிருக்கிறார்.

இங்ஙனம் பல வழிகளிலும் சமாதானத்துக்கு இடையூறு செய்து வந்ததுமின்றி, ரஷியா உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கிறது: கம்யூனிஸ்டு நாடுகளும் முதலாளித்வ நாடுகளும் சமாதானமாக வாழ்வதை விரும்பவில்லையென்றும், உலக கம்யூனிஸ்டுப் புரட்சியை ஆதரிக்கிறது என்றும் பழி சுமத்துவதில் ஏதேனும் பொருளுண்டா என்று பாருங்கள்.

உண்மையை ஆராய்ந்து பார்க்கின்ற போது உலக அமைதிக்குப் பங்கம் விளைவிப்பது அமெரிக்காவே என்பது தெளிவாகத் தெரியும். கம்யூனிசத்தை எதிர்க்கும் நாடுகளுக்கெல்லாம் டாலர் தானம் செய்ய அமெரிக்கா முன் வந்ததே இதற்குச் சான்றாகும். அதே சமயத்தில் ரஷியாவின் நல்லெண்ணத்துக்கு இது எடுத்துக்காட்டாக விரும்புகிறோம். சமாதானத்தை ஏற்படுத்த ஜெர்மனி, மத்திய ஐரோப்பிய நாடுகள் முதலிய இடங்களிலிருந்து ரஷ்யா தனது படைகளை வாபஸ்பெறத் திட்டமிட்டிருக்கிறது.

இது நேற்றையதினம்நமக்குக் கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து புலனாகும் உண்மை. இங்ஙனம் ரஷியா அமைதியை நாடிய சமயத்தில், அமெரிக்காவும் அதன் அடிவருடி நாடுகளும் அமைதியைக் குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நாடுகளுக்கு ஐ. நா. சபை ஆதரவு தந்தால், தோழர் விஷன்ஸ்கி சுட்டிக்காட்டியிருப்பதுபோல் பழைய சர்வதேச ஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட கதியே இச்சங்கத்துக்கும் ஏன் ஏற்படாது?

இன்று ஐ. நா. சபை கடைப்பிடிக்கும் வழவழாப்போக்கினைத்தான், அன்று சர்வதேச சங்கமும் கடைப்பிடித்து அதனுலேயே நாஜிசம் வளர்ந்தது. அது போலவே, இன்று ஐ நா சபையின் போக்கினுல் உலகில் முதலாளித்வமும் பாசிசமும் வளர்கிறது. இதன் முடிவு ஐ. நா. சங்கத்தின் அழிவு அல்லாமல், வேறென்னவாக இருக்க முடியும்?

* * *

“பரிதாபத்துக்குரிய பழைய சர்வதேச சங்கத்தின் பாதையிலேயே ஐக்கியநாடுகள் ஸ்தாபனமும் போய்க்கொண்டிருக்கிறதென்பதாக சோவியத் அயல் நாட்டு மந்திரி ஆண்ட்ரிவாஷின்ஸ்கி 29-ந் தேதியன்று ஐ நா. பொதுச்சபையில் எடுத்துரைத்தார்.

சமாதானத்தை எய்தப்பெற சோவியத் யூனியன் ஐ. நா. வில் நான்கு முறை முயற்சி செய்தது; ஆனல் ஒவ்வொரு முறையும் ‘ஆங்கிலோ- அமெரிக்கக் குழுவினர் அதனைத் தகர்த்துவிட்டனர்’ என விஷின்ஸ்கி எடுத்துரைத்தார்.

புதியபோரொன்றுக்கு முஸ்தீபு செய்யும் வெறியர்களைத் தடை செய்ய ஐ. நா.வால்முடியவில்லையாகையால், இச்சபையும் பழைய சர்வதேச சங்கத்தின் கதியைத்தான் அடையப்போகிறதென்று அவர் மேலும் கூறிப்பிட்டார்.

உலக கம்யூனிஸ்ட் புரட்சியொன்றுக்கு சோவியத் யூனியன் வழி வகுத்து வருகிறதென்றும், கம்யூனிஸ்ட் நாடுகளும் முதலாளித்துவ நாடுகளும் சமாதான முறையில் உலகில் இருந்து வர ரஷ்யாவுக்கு சம்மதமில்லையென்றும், மீண்டுமொரு போருக்கு அது ஆயத்தம் செய்து வருகிறதென்றும் சோவியத் ரஷ்யா மீது எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகளத்தனையும் பொய்யும் அவதூறும் மிக்கவையென விஷன்ஸ்கி விளக்கினர்.

அமெரிக்காவில் குடிக் கணக்கெடுப்பு ஏற்பாடு

லண்டன், நவ. 30—

1950-ம் ஆண்டில் அமெரிக்கா கண்டத்தில் புது மக்கள் தொகைக் கணக்குத் தயாரிக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

கானடா உள்பட 22 நாடுகள் இதில் ஒத்துழைக்கும்.

பிரிட்டனும் பிரான்ஸும் 1951ம் ஆண்டில் குடிக் கணக்கைத் தயாரிக்க விருக்கின்றன.

அமெரிக்காவில் குடிக் கணக் தயாரிப்பு 1950-ல் ஆரம்பமானலும் முடிய ஓராண்டு பிடிக்கும் எனத் தெரிகிறது. மக்கள் தொகை மட்டுமின்றி சமூக பொருளாதார நிலைமை பற்றிய விவரங்களையும் சேகரிக்கும்.

இந்த புள்ளி விவரங்கள் தயாரிப்புக்காக புது எலெக்டிரானிக் ‘ஸ்டேடிஸ்டிக்’ இயந்திரம் ஒன்று உபயோகிக்கப்படும் என்று தெரிகிறது. —ருனோப்.

உணவு இறக்குமதி

இவ்வாண்டில்மட்டும் அக்டோபர் இறுதிவரை வெளிநாடுகளிலிருந்து இந்தியா 28,48,000 டன் உணவு தானியங்களை இறக்குமதி செய்துள்ளதெனத் தெரிகிறது. 1950-ம் ஆண்டில் இறக்குமதி இவ்வளவு அதிகமிராதென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தி. மு. க. பொதுக்கூட்டம்

எட்டயபுரம், நவ. 30—

26-11-49 இரவு 8 மணிக்கு எட்டயபுரம், தி. மு. கழகக் கூட்டம், நடுவிற்பட்டி, குமரன் நிலையத்தில், தோழர் மே. க. முத்து அவர்கள் தலைமையில் நடந்தது. அவ்வமயம் தோழர்கள், வீராச்சாமி, நடராஜன், சண்முகவேல், வெற்றிவேல், சுப்பையா ஆகியவர்கள் திராவிட நாடு பிரிவினைபற்றிப் பேசினர்கள்.

கடைசியாகப் பேசிய தோழர் இ. ராமசாமி பேசியதின் சுருக்கம்:—

எங்கள் திராவிடநாடு கோரிக்கை சுயநல ஆசையின்எழுந்ததல்ல சென்னை மந்திரிகள் இன்று சுதந்திர, ஜனநாயக ஆட்சி என்று தம்பட்ட மடித்துவிட்டு, பின் ஒவ்வொரு பிரச்னைக்கும் வடநாட்டு அரசியலாரின் நீண்ட படிக்கட்டை ஏறி, இறங்குவதைத்தடுத்து, உண்மை சுதந்திரம் நிறுவத்தான் திராவிட நாடு கோருகிறோம். இதற்காக எங்களை இழிவாகப் பேசுவதா? டாலரின்ரூபாய் மதிப்புகுறைப்பு பற்றி தோழர் பக்தவத்சலனர் சாதாரணமனிதனைப்போல் அபிப்பிராயம்தான் சொல்ல முடிகிறதே தவிர, வேறு என்ன செய்யமுடிகிறது? திராவிடர்களாகிய நமக்கு ஆளும் திறமை உண்டு. வடநாட்டாருக்கு, அதுவும் பார்ப்பனர்களுக்கு ஆளத் தெரியாது. ஆண்டதும் கிடையாது. ஆளத் தெரியாதவர்கள் ஆட்சியிலே இருந்து நாம் அடிமைப்படுவதா? பதிலுரையுங்கள் தேசியத் தோழர்களே!

இங்கு அதிகவருமானம்தரும் வரிகளை வடநாடு வசூலித்துக் கொண்டு, நெசவாளர்கள் பட்டினியால் இறந்து மடிவதைப் பார்த்துக் கொண்டிருப்பதா? முதலாளிகளுக்குப் போடும் ‘விளம்பரவரி போன்றவைகளை’ “போடாதே” என்று தடுக்கிறது வடநாடு. இது அடுக்குமா? கல்விக்கு, அணைக்கட்டுக்கு என பணம் கேட்டால் “இல்லை” என்கிறது. சர்க்காரோ அரசாங்கத்தினர் இன்று தங்கள் சொந்தக்காரர்களுக்கும், தூதுவர்களுக்கும் நமது வரிப் பணத்தில் பெரும் பகுதியைச் “சம்பளம் கிம்பளம்” என்று எடுத்துக் கொள்கின்றனர். இப்படிப் பட்டவர்களோடு நாம் எப்படி இணைந்து வாழ்வது? ஆகவே தான்நாங்கள் “திராவிடநாடுதிராவிடருக்கே!” என்கிறோம். இது தவறு? கூறுங்கள் தேசியத் தோழர்களே!” என்றும். இன்னும் நேரு அமெரிக்கப் பயணம் நமக்கு எவ்வளவு கேடேயப்பது என்பதுபற்றியும் விரிவாகப் பேசினர்.

பின், பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள் நெல்லை மாவட்டச்சுற்றுப்பிரயாணத்தின்போது, எட்டயபுரத்திற்கு அழைப்பதென்றும், இன்னும் சில தீர்மானங்களும் தோழர் கலிங்கன் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது. செயலாளர தோழர் மு. வெற்றிவேல் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறர்கள்.

மானேஜர் “மாலை மணி”

...பாத் பாடசாலை ...துக்கட்டிடத் ...றப்பு விழா

...ட்டிட நிதிக்கு ...000-நன்கொடை

...லாஜாபாத், நவ 30— ...பர் 26, 27-ஆம் தேதிகளில் ...லாஜாபாத் இந்து மத ...யின் புதுக்கட்டிடத் ...விழா, கல்வி அமைச்சர் ...மேனன் அவர்கள் தலைமை ...ருவாரூர் நகர் மன்றத்தலை ...ழர் தி. கா. சபாபதி அவர் ...நடத்தப்பெற்றது பாடசா ...ன்கொடை அளித்த பெரு ...டங்களை டாக்டர் மு வரத ...எம். ஓ எல். பி. எச். டி; ...பட்டு மாவட்டத் தலைவர் ...ழர் வீ. சே. இராமசாமி. ...குடி நகர மன்றத்தலைவர் ...ஆ. ராம. கோகலிங்கனர், ...ழிப்புலவர் வித்துவான் ...பொ. மீனுட்சி சுந்தரனர். ...ர் எம். ஓ. எல். திருசசி. ...ர் கி. ஆ. பெ. விசுவநாதம். ...ர் மா. பொ. சிவஞானம். ...லை. தோழர் வி. சே. தர்ம ...பி. எ. முதலிய பெரியோர் ...வைத்தனர்.

...த்திறப்பு விழாவிற்கு குடி ...ம் திருமகள் நூல் ஆலை ...ஜிங் டைரக்டர் தோழர் ...அ. சண்முகனர் அவர்களும், ...யத்தம் நகர் மன்றத் தலைவர் ...ர் பு. கா. கங்காதரனும், ...லை முன்னுள் மேயர் தோழர் ...சாமியும் தலைமை வகித்தார் ...அவர்கள் பேசுகையில், பள் ...டத்திற்கு நன்கொடை ...ப்பவர்கள் பள்ளிக்கூடவளர்ச்சி ...என்றும் கருத்துடையவர் ...க இருக்கவேண்டுமென்றுகூறி ...கள்.

...ள்ளலார் இல்லத்துக்குப் புதுக் ...டடம் ஒன்று கட்டுவதற்கு, ...ரவை திவான்பகதூர் சி. எஸ். ...த்தினசபாபதி அவர்கள் வால் ...ன் விழா ஆற்றுகையில் இப் ...டசாலை செய்து வரும் நாட் ...பணிகளையும் பொது மக்கள் ...தற்கு உதவி செய்யக் கடமைப் ...ட்டிருப்பதையும் எடுத்துக்கூறி ...ழ்த்தினர்கள்.

...தர்மபுரி தோழர் கா. ஆ. மா. ...த்தப்பன் அவர்கள் கட்டிட நிதிக் ...க ரூ 2000 நன்கொடை அளித் ...ர்கள். பாடசாலைச் செயலாளர் ...தாழர் வா. தி. மாசிலாமணி ...வர்கள் எல்லோருக்கும் நன்றி ...ற, விழா இனிது நிறைவேறி ...து. (ந-சி)

காணப்படவில்லை

நமது இயக்கத்தில் தீவிரமுடன் ...ஈடுபட்டு வந்தவமையின் காரணத் ...தால் திண்டுக்கல்லைவிட்டு, ஒரு தோழரிடமும் தாய் தந்தையரிடமும் சொல்லிக்கொள்ளாமல் எங்கேயோ சென்றுவிட்டார். தோழர் எ. விசுவநாதன்அவர்களைப் பார்க்க அவருடைய தாய்தந்தையர் பெரிதும விரும்பி துடிக்கின்றனர். ஆகையால் மேற்படி தோழரைக் கண்ட தோழர்கள் அறிவிக்கவும். முக்கியமாக சென்னையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். சென்னைத் தோழர்கள் தெரிவிக்கு படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம். விஸ்வநாதனைக் கண்ணுற்றால் உடன் புறப்பட்டு வரவும். அவருடைய உடன் பிறந்த தம்பி தோழர் A. சுப்பையா வே. பாக்கு கடை, மெயின்ரோடு, திண்டுக்கல், அறிவிக்கிறர்.

ஏஜண்டுகளுக்கு

பில் கிடைக்கப்பெற்ற ஏஜண்டுகள் தங்களுடைய பாக்கியை தயவுசெய்து 7—12—49 க்குள் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்கிறோம். அனுப்பத் தவறும் ஏஜண்டுகளுக்குக் கண்டிப்பாக பத்திரிகை நிறுத்தப்படும்.

மானேஜர் ‘மாலைமணி’

வலியவம்புக்குப்போவோர் நாங்களல்ல

தனிப்பட்ட யாரும் எங்களுக்கு விரோதிகளல்ல

:0:

பழமையும் பாசிசமுமே எங்கள் விரோதிகள்

(0)

பொன்மலையில் தோழர்கள் டி. கே. சீனிவாசன் — அன்பழகன் பேச்சு

பொன் மலை, நவ. 30—

26—11—49 சனிக்கிழமை மாலை 6-மணிக்கு, பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தோட்டத்தில் பொதுக் கூட்டம் நடைபெறும் என்று, விளம்பரம் செய்யப்பட்டிருந்தபடி கூட்டம் ஆரம்பமாவதற்கு முன், பொன்மலை பெரியார் பக்தர்கள் என்று சொல்லிக்கொண்டு புதிதாக ஏற்படுத்தி இருந்த கழகத்தினர் போலீசாரிடம் காவடி எடுத்துக்கொண்டு ரிப்போர்ட் செய்து இருந்ததின் காரணமாக, மாலை 5-30 மணிக்கு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பொன்மலை திராவிட வாலிபர் கழகத்தினரைக் கூப்பிட்டனுப்பி இருந்ததின் காரணமாக, பொன்மலை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கழ ரிக்கார்டுகளையும், தீர்மானங்களையும் மினிட் புத்தகத்திலிருந்துபடித்துக் காண்பித்து, நாங்கள்தான் மெஜாரிட்டி கழகத்தினர் என்றும் கழக அங்கத்தினரல்லாதவர்கள் கூடிக்கொண்டு செய்யும் எந்த முடிவும் எங்களுக்கு சம்பந்தம் இல்லை என்றுசொன்னபிறகும், ரிக்கார்டுகளையும் வாதங்களையும் கேட்டுக்கொண்டு இருந்துவிட்டு நீதிஉங்கள்பக்கம்தான் இருக்கிறது ஆனாலும் நீதிபதி நானல்லவே, ஆகையால் கூட்டத்தைக்கழகத்தோட்டத்தில் நடத்தக்கூடாது என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சொன்னார். நீதி எங்கள் பக்கம் இருந்தும் கூட்டத்தை நிறுத்தும் எண்ணத்துடன் சொல்லும் தங்கள் அபிப்பிராயம் சரியல்ல என்றும், அப்படிக் கலகம் செய்பவரை அடக்க வேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருந்தும்அநீதிமுறையில் இருக்கும் தங்கள் தீர்ப்பு சரியல்ல என்று மீண்டும் எடுத்துச்சொல்லவே, அப்படி மீறி நடத்துவீர்களேயானால் கண்டிப்பாகக் கூட்டத்தைக் கலைப்பேன் என்று சொன்னார் சர்க்கிள் இன்ஸ்பெக்டர். அப்படியானால் எழுதிக்கொடுங்கள் என்று சொல்லி எழுதி வாங்கிக்கொண்டு கழகத் தோட்ட வாசலிலே கூட்டத்தை நடத்துவது என்று முக்கிய தோழர்களுடைய முடிவுப்படியேகூட்டம் இரவு 7-மணிக்கு ஆரம்பமாகியது. இடையே சிறு மழை தூற்றலாக இருந்தும் மக்கள் கலையாமல் இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜி. பராங்குசம்

தோழர் ஏ. கோவிந்தசாமி முன்மொழிய, தோழர் சி.எஸ் ராஜு வழிமொழிய தோழர் ஜி. பராங்குசம் தலைமை வகித்து, முகவுரையாக பெரியார் ஆதரவாளர்கள் செய்த சிறு விஷமத்தனத்தினால் சிறிது நேரம் தாமதப்பட்டதற்கு மன்னிக்கவேண்டும் என்றும், சென்ற 9 ஆண்டுகளாக செய்துவந்த கழக நடைமுறைகளைப் பற்றியும், பெரியாரின் பொருந்தா திருமணத்தையும் தலைவர் ஈ. வெ ரா.-வைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று ஒரேமனதாக தீர்மானித்திருந்தும, சுயநலக்காரர்களுடன் கூடிக்கொண்டு கழகச் சொத்தைக் கைப்பற்றவேண்டும் என்று ஒரு சிலர் செய்துவரும் செயல்கள் கண்டிக்கத்தக்கது என்றும், எந்த வகையிலும் யாரும் கைப்பற்ற முடியாது என்று எச்சரிக்கை செய்துவிட்டு தோழர் சீனிவாசனை பேசுமாறு கேட்டுக்கொண்டார்.

டி. கே சீனிவாசன்

தோழர் டி. கே. சீனிவாசன் பேசும்போது குறிப்பிட்டதாவது:—பொன்மலை திராவிட வாலிபர் கழகத் தோழர்களுக்கும் தனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு' இன்று பெரியார் பக்தர்களாக இருப்பவர்கள் சுயநலமிகள், பிற்போக்காளர்கள், தொழிலாளர் போராட்ட காலங்களில் கங்காணிகளாக இருந்தவர்கள்தான். சென்ற சில வருஷங்களுக்கு முன் பொது உடமைத் தோழர்கள் தொல்லை கொடுத்து தோல்வியுற்ற தொந்திரவுகளைவிட அதிகமாக கொடுக்க உங்களால் முடியாது. நாங்கள் வலிய வம்புக்குச் செல்ல மாட்டோம் வந்தால் விடவும் மாட்டோம் என்பதைக் கழக சரித்திரத்தைப் புரட்டி பார்க்குமாறுகேட்டுக்கொள்கிறேன் பெரியாரின் பொருந்தாத் திருமணத்தைக் கண்டித்ததின் காரணமாக எங்களைத்துரோகிகள், சதிகாரர்கள் என்று வசைமாரி பொழிகிறாரே ஈ. வெ. ரா. துரோகிகள் நீங்கலாக மற்றவர்கள் இதுநாள் வரையிலே கழகத்திலே இருந்தவர்கள்தானே என்இன்னும் பணத்தைப் பொதுவாகக டிரஸ்டு பத்திரம் எழுதவில்லை என்று ஈ வெ. ரா.விடம் சண்டைக்குப் போங்கள். அதை விட்டுவிட்டு தொண்டர்களிடம் சண்டை போடுவதால், கொள்கை வளராது. என்பதை உணர்ந்து நடவுங்கள். நாங்கள் இருந்த இடத்தைப் பூர்த்திசெய்யலாம் என்று பலர் முயற்சி செய்யலாம் இவர்கள்பேச்சைக் கேட்கமக்களுக்கு பொறுமை வேண்டுமே! என்றாலும் இதுவரையில் மோதுதல் இருக்கக்கூடாது ஈ. வெ. ராவின் வாழ்நாளிலேயே கொள்கையை வளர்த்து திராவிடநாடு திராவிடர்களுக்காகச் செய்ய நம்மால்தான் முடியும் என்று அமைதியான முறையில் பிரச்சாரம் செய்கிறோம்''

உழைத்து உழைத்து எலும்புக்கூடாகி இயற்கை எய்திய அழகிரிசாமியின் கடைசி காலத்தை மனதிலிறுத்தி நடந்துகொள்ளுங்கள்'' நேருவின் அமெரிக்க சுற்றுப் பிரயாணம் அமெரிக்க முதலாளிகளுடன் பேரம்பேசி இந்தியாவை கடனாளியாக்கி அடிமைப்படுத்தத்தான் பிரயோசனம் படுமே தவிர நன்மை அடைய வழி இல்லை நதிரி நாற்காலிக்குப் போகுமுன் ஏழையின் அவலக் குரல் காதில் விழுந்தது இப்போது கோகிலகான எம். எஸ். சின் இன்னிசை காதில் விழுகிறது. தொழிலாளர்களின் தயவு வேண்டியிருந்தது அன்று; முதலாளிகள் தயவை நாடுகிறார் இன்று என்றும் சென்னை மாகாண ஆளவந்தார்கள் பொதுவுடமைக்கட்சியைச்சட்டவிரோத மாக்கினார்களே தவிர, அடிப்படைத் தொல்லையை நீக்க பொருளாதார சமத்துவ நிலை உண்டாக்காதிருக்கும் வரையில் பொது உடமைக் கொள்கையை அழித்துவிட முடியாது என்றும் சுமார் ¾ மணி நேரம் சொற்பொழிவாற்றினார். அதன் பின்,

க. அன்பழகன்

தோழர் க. அன்பழகன் எம். ஏ. பேச ஆரம்பித்த போது பலத்த மழை பெய்து கொண்டு இருந்தும் நனைந்து கொண்டு மக்கள் கேட்டுக் கொண்டிருந்தது குறிப்பிடத் தக்கது. பேச்சின் சுருக்கமாவது:

பொன்மலை, தொழிலாளர்கள் நிறைந்த இடம். இன்று நாடு இருக்கும் நாதியற்ற நிலைமையைக் குறித்தும், அரசியலில் நாம் அன்னக் காவடிகளாக ஆக்கப்பட்டிருக்கிறோம், டில்லி ஆளவந்தார்களால் என்பதையும் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றியும் பேசலாம் என்று வந்தேன். ஆனால் ஆதரவாளர்கள் கொடுத்த தொல்லையால் பெரியாரின் பொருப்பற்றத் தன்மையைப் பற்றிய பேச நேரிட்டதற்கு வருந்துகிறேன். கழகக் கொள்கையை வளர்க்க மக்கள் ஆதரவு உங்களுக்கு இருந்தால் நீங்களும் வேலை செய்யுங்கள் நாங்களும் வேலைசெய்கிறோம் இரு வேலைகளின் காரணமாக திராவிட நாட்டைக் கூடியவிரைவினில் அடைவோம். அதைவிட்டுவிட்டு தொண்டர்களுக்குள் மோதுதல் ஏற்பட்டால் தவர்களுக்கு உள்ள பலவீனம் விளங்குமே தவிர, மக்களின் அவலநிலை மாறாது தொழிலாளர்களின் நிலையும் உயராது.''எங்களுக்குத் தனிப்பட்ட யாரும் விரோதியல்ல; பழமையும், பாசிசமும்தான் விரோதி'' நேருவின் அமெரிக்க விஜயத்தைப் பற்றியும் அரசியல் நிர்ணய சபையின் சட்டதிட்டங்களைப் பற்றியும் மாகாண ஆளவந்தார்கள் பேசாதே, எழுதாதே, நடிக்காதே என்றுபோடும் அவசர சட்டங்களைக் கண்டித்தும் பேசிக்கொண்டிருக்கும் போது, மழை அதிகமாக பெய்யவே இதுவரையில் நனைந்து கொண்டு பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த உங்களுக்கு நன்றிகூறி மறுமுறை உங்களைச் சந்தித்து பேசுகிறேன் என்று சொல்லி முடித்துக் கொண்டார். பிறகு தலைவர் நன்றிகூறலோடு கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிந்தது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

3—12—49

புலியமங்கலம் (அரக்கோணம்):-என். வி. நடராசன், சத்தியவாணிமுத்து, என். சஞ்சீவி.

4—12—49

கும்பகோணம்:— சி.என். அண்ணாத்துரை, ஈ.வெ கி. சம்பத், பி, பழனிச்சாமி, வி. சின்னத்தம்பி, கே. கே. நீலமேகம்.

திருவல்லிக்கேணி... கிருஷ்ணம்பேட்டை(சென்னை):- கே. அன்பழகன், சி. பி.சிற்றரசு, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன்.

சக்கம்பட்டி :— எம். எஸ். இராமசாமி.

மதுரை :— இரா. நெடுஞ்செழியன், எஸ், உத்தண்டன, எம். எம். அய்யாசாமி,

5—12—49

திண்டிவனம் : சி. என். அண்ணாத்துரை.

இனி நடப்பவை

சென்னை—சர்க்கார் மோட்டார் தொழிற்சாலை தொழிலாளர் சங்கத்தின் கூட்டமொன்று 2-12-49 வெள்ளி மாலை 5-30 மணிக்கு பழைய ஆனந்த விகடன் அலுவலகத்திற்கு எதிரிலுள்ள மைதானத்தில் நடைபெறும் தோழர் இ. இராமலிங்கம் தலைமை வகிப்பார். தோழர் ஜி. இராமாநுஜம் (இ. தே. தொ. கா. தமிழ்நாட்டுப் பொதுக் காரியதரிசி) அவர்கள் கலந்து கொள்வார்.

* * *

புலியமங்கலம்(அரக்கோணம்)—இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம், 3—12—49 சனி மாலை 5 30 மணிக்கு தோழர்எ.எல்.சி. சஞ்சீவி தலைமையில்நடைபெறும் தோழர்கள் என். வி. நடராசன், வி. முனுசாமி, தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருவண்ணாமலை— இங்கு நடைபெற்றுவரும் அ. இ. சுதேசி கைத்தொழில் விவசாயப் பொருட் காட்சியை ஒட்டிய நிகழ்ச்சியாக 3—12—49 மாலை 6-30 மணிக்கு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் 'காந்திமகான் கதை' வில்லுப்பாட்டும், இதனுடன் பொழுது போக்கும் நடைபெறும்.

* * *

பொள்ளாச்சி—இவ்வூர் திராவிட வாலிபர் முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம் 3—12—49 சனி இரவு 9 மணி அளவில் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

ஆம்பூர்—ஆம்பூர் வட்டாரக் கிளைக் கழகங்கள் ஏற்படுத்துவதற்காக 4—12—49 ஞாயிறு காலை 10-மணிக்கு இவ்வூர் தி. மு. கிளையின் செயற்குழுக் கூட்டம், காசா சாந்தமியான் தெரு. 5 எண்ணுள்ள இல்லத்தில் கூடும்.

• • •

அய்யம்பேட்டை...அய்வாசல்லூர்— இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக்கூட்டம், 4—12—49 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு தோழர் என். வி. ராஜையன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

* * *

கும்பகோணம்— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 4-12-49 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு காங்கேயன் சாந்தி பூங்காவில், தோழர் வி. சின்னதம்பி அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது, தோழர் சி. என். அண்ணாத்துரை எம். ஏ, ஈ. வி. கே சம்பத், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

• • •

பட்டுக்கோட்டை— தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்களின் தாயார் இயற்கையெய்தியமை குறித்து அன்னாரின் நினைவு நாட் பணி 4—12—49 ஞாயிறன்று காமாட்சி நாயுடு பாளையம் தனது இல்லத்தில் ஆற்றப்படும். எனத் தோழர் கே. வி. ஏ. இராமமூர்த்தி அறிவிக்கிறார்.

* * *

திருவாரூர்—இவ்வூர் திருவள்ளுவர் செந்தமிழ்க் கழகத் திருக்குறள் வகுப்பு, 3—12—49 சனிமாலை 6-மணிக்கு நடைபெறும். அதுபோது, தமிழ்ப் புலவர் தோழர் பரிமேலழகனார் பொருட்பாலிலுள்ள 'வலியறிதல்' என்ற அதிகாரத்தின் ஐந்து குறள்களுக்கு விளக்கவுரையாற்றுவார். 10-12-49 அன்று 'மனோன்மணீய' வகுப்பும் நடைபெறும்.

• • •

விருதுநகர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 4.12.49 ஞாயிறுகாலை 10 மணிக்கு என். பி. எஸ். ஹாலில் நடைபெறும். அதுபோது தி. மு. தலைமைக் கழக நிதிக்காக "சந்திரமோகன்" நாடகம் நடத்துவதற்கு பொறுப்புக்குழு தேர்ந்தெடுக்கப்படும். உறுப்பினரனைவரும் தவறாது வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

'மகாத்மா' சீடர்கள்...

[1 பக்கம் தொடர்ச்சி]

முடிவு செய்தது எந்தவகையில் நியாயமும் நேர்மையுமாகுமென்று கேட்கிறோம். 'அகிம்ஸையின் அவதாரமாகிய' காந்தியாருக்கு இல்லாத தாராள மனப்பான்மையும் தர்ம சிந்தனையும் இன்றைய காங்கிரஸ் தலைவர்கட்கு எப்படி வந்துற்றதென்பது நமக்குப் புலப்படவேயில்லை! ஏன் வந்ததென்று விளங்கவில்லை! 'தொட்டிலையும் ஆட்டி குழந்தையையும் கிள்ளிவிடும்' இக்கொள்கை 'தேசீயத் தலைவர்கட்கென்றே உதயமாகியிருக்குமொன்றாகும்! தேசீயத்தின் பெயரால் தொடர்ந்து பித்தலாட்டம் செய்துவரப் பயன்படுவது தவிர, இந்நஷ்டஈட்டுக்கொள்கையால் ஏழை விவசாயிகளின் வியர்வை எந்த அளவுக்கு வியர்த்தமாகிறதென்பதை இவர்கள் உணர்வார்களாவென்று கேட்கிறோம்.

இன்று அரியாசனத்தில் அகமகிழ்ந்தேறியமர்ந்திருக்கும் ஆட்சியாளர்கள் அன்று 'தரித்திர நாராயணருக்கு', மக்கள் ரட்சகராக', 'தேசத்தை உய்விக்க வரும் உத்தமர்களாக', 'பாட்டாளிகளின் பாதுகாவலராக', 'ஏழையர் துயர்களைய வரும் அவதாரபுருஷர்களாக' இருந்த காலத்தில் என்னென்ன கூறி தம்பட்டமடித்தனர்! வறட்டு ஜம்பமும் வாய் வேதாந்தமும் எவ்வளவு 'தடபுடலாக' இருந்தன! தொண்டைக் கிழியக் கத்தித் 'திக்விஜயம்' பல புரிந்தனரே! 'உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகிறோம்' என்றனர். சில முதலாளிகளிடமிருந்து நிலத்தை அப்படியேக் கைப்பற்றி, பாட்டாளிகள் கையில் பாங்குடன் ஒப்படைக்கிறோம் என்றனர். செய்தனரா? எத்தனையோ வாக்குறுதிகளை இலவம் பஞ்சைப்போல காற்றில் பறக்கவிட்ட மாதிரியேத் தானே இதனையும் விட்டனர்! [illegible] நிலத்தை உழவனுக்கு உரித்தாக்க [illegible]; அவன் உயிரை [illegible] எடுக்க திருந்தனர்? [illegible] பணம் பலனிரண்டு கோடியை அப்படியேக சுவார்ந்து, யாரால் அவன் எலும்புந் தோலுமானனோ அவரிடமே குவிக்கத் துணிந்துவிட்டனரே! ஏழையர் துயர்களையவந்த 'அநாதை ரட்சகர்களின்' யோக்யதை இதுதானா?

காந்தியார் எதனை 'எவ்வகையிலும் இயலாத காரியம்' என்று கூறினாரோ, அதனை இயலும் என்று சாதித்துக் காட்ட அங்கட்டி நிற்கிறார்கள், அவருடைய பக்தர்கள். நஷ்டஈடு தர பொதுப்பணம் இடந்தராது என்று காந்தியார் கூறினார், 'இந்தரும' என்று கூறிக்கொண்டு இவர்கள் புறப்பட்டுவிட்டனர்! நிதி நிலையில் நெருக்கடி, நாட்டுப் பொருளாதார நிலையை நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறது. பட்டினி—பசி வேலையில்லாத திண்டாட்டம், கள்ளமார்க்கட்காரர் கைங்கரியங்கள்—இவற்றுக்கிடையிலும் நில மன்னர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப் புறப்பட்டிருக்கிறார்கள் நாடாள வந்தவர்கள்!

நல்வாழ்வு வாழ எல்லா

வகையிலும் உரிமையும் தகுதியுமுடைய லட்சாதிலட்சம் மக்களை ஆண்டு பலவாக அடக்கியொடுக்கி வேலைவாங்கி, அவர்களது இரத்தத்தைக் குடித்து வயிறு முதுகை நோக்கி வளைந்து குழிந்துபோமெண்ணம் வாட்டிப்பிழிந்த வன்னெஞ்சக்காரருக்கு நஷ்டஈடாம்! அதுவும் நியாயமான முறையில் நஷ்டஈடாம்! இந்நாட்டு 'மக்கள் சர்க்கார்' இதை வழங்கப்போகிறதாம்! இதுதான் ஜனநாயக ஏழைப் பங்காளர் ஆட்சியாம்!

இராணுவ நிர்வாகம் மாறுகிறது

ஐதராபாத்துக்கு மந்திரிசபை நியமனம்

தோழர் எம். கே. வெள்ளோடியை ஐதராபாத்தின் பிரதம மந்திரியாகவும், இராணுவ சர்க்காரின் தற்போதைய மந்திரி சபையினரைப் புதிய மந்திரிகளாகவும் நியமித்து நைசாம் நவ. 30 அன்று உத்தரவொன்று பிரப்பித்துள்ளார். இவ்வுத்தரவு, டிசம்பர் 1-ந் தேதி முதல் அமுலுக்கு வருகிறது.

இராணுவ கவர்னரிடம் இதுவரையிருந்த நிர்வாக அதிகாரங்களனைத்தும், சட்டம் செய்யும் அதிகாரங்கள் உட்பட, இனிமேல் பிரதம மந்திரியாலேயே மேற்கொள்ளப்படுமென நைசாமின் கட்டளை கூறுகிறது.

நாற்பதாண்டுத் தொண்டுக்கு நல்வாழ்த்தும் பாராட்டும்

மருத்துவக் கல்லூரி 'அட்டெண்டர்' சிறப்பு செய்யப்பட்டார்

———(0)———

உருவப்படந் திறந்து, பொற்கிழியளித்து, பாராட்டிதழ் படித்தனர்

சென்னை மருத்துவக்கல்லூரியில் நாற்பதாண்டுகாலம் 'அட்டெண்டர்'த் தொடர்ந்து பணியாற்றி இப்போது ஓய்வு பெறும் தோழர் பட்டு தனக்கோடி என்பவரைப் பாராட்டுமுகத்தான், கல்லூரியதிகாரிகள் நவ. 30-ந் தேதியன்று சிறப்புவிழாவொன்று நடத்தினர். விழாவில் ஆசிரியர்கள், டாக்டர்கள், மாணவர்கள் பெரும்பாலோர் கலந்துகொண்டனர். நாற்பதாண்டு காலம் சேவகம் செய்த தோழர் தனகோடிக்கு வாழ்த்துப்பாவொன்று படித்தளிக்கப்பட்டதோடு, ஒரு பணமுடிப்பும், போர்வையும் வழங்கப்பட்டன.

தோழர் தனக்கோடியிடமிருந்து தான் பற்பல விஷயங்கள் விளங்கிக் கொண்டதாக விழாவுக்குத் தலைமை தாங்கிய டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி குறிப்பிட்டார். தனக்கோடியின் உருவப்படத்தை டாக்டர் சீனிவாசலுநாயுடு திறந்து வைத்தார்.

தனது 'தலைவர்கள்' தனக்களித்த பாராட்டு நல்லுரைகளனைத்தாலும் உள்ளம் பொங்கி உவகைபூத்த தோழர் தனக்கோடி இருக்கையிலிருந்து எழுந்து நின்று, இரு கை உப்பி எல்லோரையும் வணங்கி தனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டார்.

கம்யூனிஸ்ட் சீனாவில் சாரண இயக்கத்துக்குத் தடை

சீனாவிலுள்ள சாரணர் இயக்கம் "பாஸிஸம் ஏகாதிபத்தியம் இவைகளின் பிறவற்றுக்கே உடந்தையும் உதவியுமாக இருந்து வருவதால்," சீனா முழுவதிலும் அவ்வியக்கத்தின் மீது தடை விதித்து, கம்யூனிஸ்ட் அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

காண்டனிலிருந்து 'ஏகாதிபத்திய போயர் போரின்போதே சாரண இயக்கம் பிரிட்டனில் துவக்கப்பட்டது' என்று காண்டனிலிருந்து கிடைக்கப்பெறும் இத் தகவல் மேலும் கூறுகிறது.

இத்தாலியில் புயலால் பெரும் சேதம்

ரோம், டிச. 1—

சென்ற வாரத்தில் இத்தாலியில் அடித்த புயலால் 50,0000 பவுனுக்கு மேற்பட்ட சேதம் ஏற்பட்டிருக்கிறது.

போ நதிப் பிரதேசம், ஆர்னோ நதிபாயும் பிரதேசம் மிகவும் சேதத்திற்குள்ளாகியிருக்கிறது. ஆயிரக்கணக்கான நிலங்கள் நஷ்டமாயிருக்கின்றன.

—ருளோப்

வானொலி

சென்னை

(8—12—49 சனிக்கிழமை)

[211 3 மீட்டர்கள்]

காலை:

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 சந்திரா சபத்—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 சினிமா பாட்டுகள்

பிற்பகல்:

- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 சினிமா பாட்டுகள்
- 2-00 தமிழில் செய்திகள்
- 2-10 புல்லாங்குழல்
- 2-15 சிறுவர் நிகழ்ச்சி

மாலை:

- 5-30 கோபாலகிருஷ்ண ஐயர்—பாட்டு
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-20 ராஜம் வைத்தியநாதன்—பாட்டு

இரவு:

- 7-00 ராமபாகவதர்—பாட்டு
- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 குரல்வளை
- 7-45 டி. சௌடையா—வயலின் பாலக்காடு மணி—மிருதங்கம், வில்லாத்திரி—கடம்
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 எசு. சிதாராமரெட்டி—(ஆங்கிலப் பேச்சு)
- 9-30 இசைத்தட்டுகள்
- 10-30 முடிவு.

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

- 7-15 தமிழில் செய்திகள்
- 7-30 முத்துசாமி—பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 8-15 டி. எஸ். உலகநாதன்—வயலின்
- 8-30 சித்ராசனம்

பிற்பகல்:

- 1-00 டி. எஸ். உலகநாதன்—
- 1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
- 1-40 பல்கலைக் கழகங்களுக்கு (ஆங்கிலம்)
- 2-00 தமிழில் செய்திகள்

மாலை:

- 5-00 பி. முத்துசாமி—பாட்டு
- 5-40 ஜி. சங்கர கோபாலன்—புல்லாங்குழல்
- 6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 6-15 சுதாரணம்
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

- 7-5 தமிழில் செய்திகள்
- 7-30 எஸ். நடராஜ ராஜம்—பேச்சு
- 7-45 சென்னையில் உள்ளபடி
- 9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
- 9-15 சென்னையில் உள்ளபடி
- 9-30 இசைவேளை (இ. த.)
- 10-00 முடிவு.

ஆசிரியர்கள் பயிற்சித் திட்டம்

மூதியோர்க்குக் கல்வி பயிற்றுவிக்கும் திறத்தில் தேர்ச்சியளிக்கும் திட்டத்தின்மீது ஆசிரியர்களுக்கு ஊக்கம் ஏற்படும் வகையில், அத்தகைய தேர்ச்சிக் கல்வி பெறச் செய்யும் ஆசிரியர்களுக்கு ஜில்லா போர்டுகளே அலவன்ஸ் தொகை தந்துதவ வேண்டுமென சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளார்களாம்.

Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/41, Muthumari Chetty Street, Madras-1.